**கவனிக்க**.- 10.01.2025 ஆந் திகதிய 2419 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2420 - 2025 ජනවාරි මස 17 වැනි සිකුරාදා - 2025.01.17

2420 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 44 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 50 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, சனவரி மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கே. ஜீ. பிரதீப் புஷ்ப குமார,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

பதிவாளர் நாயகம் திணைக்களம்

**சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ (கண்டிய/பொது) பதிவாளர் பதவி – அநுராதபுரம் மாவட்டம்**

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.-** க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, திசெம்பர் 30.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| அநுராதபுரம் | தலாவ | தலாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம்பலாத பிரிவின் விவாகம் (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

01-187

---

சுற்றாடல் அமைச்சு

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் அதிவிசேட தரத்தின் பிரதான பணிப் பரிசோதகர் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல் - 2025**

1. தற்போது வெற்றிடம் நிலவும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில், இலங்கை தொழில்நுட்ப சேவையில், 02 பிரதான பணிப் பரிசோதகர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு இத்திணைக்களத்தில் செயலூக்கமான சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்/ எந்திரவியல்) அல்லது திட்ட வடிவமைப்பாளர் ஆகிய பதவி ஒன்றின் தரம் I உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தகைமைகள்** :

(i) (சிவில்/ எந்திரவியல்) அல்லது திட்ட வடிவமைப்பாளர் ஆகிய பதவி ஒன்றின் தரம் II இல் ஆகக்குறைந்தது 06 வருடங்கள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உரிய அனைத்து 06 சம்பளவேற்றங்களையும் உழைத்திருத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்றுத் தண்டனையைப் பெற்றிருக்கக்கூடாது.

(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் பிரகாரம் பதவி உயர்வு திகதிக்கு முந்திய 06 ஆண்டுகளுக்குள் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்.

(iv) மூன்றாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். (1930/12 ஆம் இலக்க மற்றும் 01.09.2015 ஆம் திகதிய இலங்கை தொழில்நுட்ப சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம், அந்த சேவை பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும் திகதியில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்று 5 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் III ஆம் வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவதைற்கான தேவையிலிருந்து விலக்களிக்கப்படும்).

(v) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செயவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருததல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :** அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரிசோதனைக் குழுவொன்றின் மூலம் நடாத்தப்படும் சேவை அனுபவம் மற்றும் திறமை ஆகியவற்றுக்கு புள்ளிகள் வழங்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் முடிவுகளின் அடிப்படையில் ஏனைய தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென நியமன அதிகாரியால் தகைமைகள் சரிபார்க்கப்பட்ட பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்காணலின் தகைமை ஒழுங்குவரிசையின் அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விசேட தரத்திற்கு பதவியுயர்த்தல் நியமன அதிகாரியால் மேற்கொள்ளப்படும்.

i. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் நடைமுறை

| *தொ. இல.* | *புள்ளி வழங்கும் முறை* | | *ஆகக்கூடிய புள்ளி* |
|---|---|---|---|
| 01 | **சேவை அனுபவம் :**<br>**ஏனைய உத்தியோகத்தருக்கான சேவை மூப்பு** = **அதிகசேவை மூப்பு உத்தியோகத்தருக்கு ஆகக்கூடிய புள்ளிகள் வழங்கப்படும் சேவை மூப்புக்கு ஒதுக்கப்பட்ட ஆகக்கூடிய புள்ளிகள்** / **அதிசேவை மூப்பு உத்தியோகத்தரின் மேலதிக சேவைக்காலம் (வருடம் x 12 + மாதம்)** x **ஏற்புடை உத்தியோத்தரின் மேலதிக செயலூக்க திருப்திகரமான சேவைக்காலம் (வருடம் x12 + மாதம்)** | | 30 |
| 02 | **திறமை**<br>❖ **தொழிற் தகைமை**<br>(a) **தொழில் துறைக்கு ஏற்புடைய பாடநெறி**<br>• இரண்டு வருட டிப்ளோமா 16 புள்ளிகள்<br>• ஒருவருட டிப்ளோமா 12 புள்ளிகள்<br>• 06 மாதங்களுக்கு குறையாத சான்றிதழ் பாடநெறி 08 புள்ளிகள்<br>• 01 மாதத்திற்கு மேற்பட்ட 06 மாதங்களுக்கு குறைவான சான்றிதழ் பாடநெறி 08 புள்ளிகள்<br>* ஆகக்கூடிய தகைமைகளைப் பூர்த்திசெய்த பாடநெறிக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | 16 | 45 |
| | (b) **உள்நாட்டு அல்லது வெளிநாட்டு இயலளவு மேம்பாட்டு பயிற்சிப் பாடநெறி/நிகழ்ச்சித் திட்டங்களுக்கு**<br>• 01 மாதம் அல்லது அதற்கு மேல் 05 புள்ளிகள்<br>• 01 வாரம் - 01 மாதத்துக்கு இடைப்பட்ட பயிற்சி 02 புள்ளிகள்<br>• 01 வாரத்துக்கு குறைவான பயிற்சி 01 புள்ளி<br>* ஆகக்கூடிய புள்ளிக்கு உட்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட பயிற்சிப் பாடநெறி/ நிகழ்ச்சித்திட்டத்திற்கு புள்ளிகள் வழங்கப்படும். | 10 | |
| | ❖ **ஆங்கிலப் பாடநெறி**<br>• 06 மாதங்களுக்கு குறையாத டிப்பாளோமா பாடநெறி 06 புள்ளிகள்<br>• 06 மாதங்களுக்கு குறைந்த 03 மாதங்களுக்கு மேற்பட்ட சான்றிதழ் பாடநெறி 03 புள்ளிகள்<br>* ஆகக்கூடிய தகைமைகளைப் பூர்த்திசெய்த பாடநெறிக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | 06 | |
| | ❖ **கணினி / தகவல் பாடநெறி**<br>• 06 மாதங்களுக்கு குறையாத டிப்பாளோமா பாடநெறி 09 புள்ளிகள்<br>• 06 மாதங்களுக்கு குறைந்த 03 மாதங்களுக்கு மேற்பட்ட சான்றிதழ் பாடநெறி 06 புள்ளிகள்<br>• இலங்கை கணினி செயற்பாட்டு அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் 03 புள்ளிகள்<br>* ஆகக்கூடிய தகைமைகளைப் பூர்த்திசெய்த பாடநெறிக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | 09 | |

| *தொ. இல.* | *புள்ளி வழங்கும் முறை* | | *ஆகக்கூடிய புள்ளி* |
|---|---|---|---|
| | ❖ **தொழில் துறைக்கு ஏற்புடையதாக தாபன ரீதியாக பெற்றுள்ள பாராட்டுக் கடிதம்**<br>• பொது 230 பீ மாதிரிப்படிவம் பிரகாரம் பாராட்டுக் கடிதம் 02 புள்ளிகள் வீதம்<br>• தனது திணைக்களத் தலைவர் ஊடாக பெற்றுள்ள பாராட்டுக் கடிதம் 01 புள்ளி வீதம் | 04 | |
| 03 | **நேர்முகப் பரீட்சை**<br>• ஆளுமை 02 புள்ளிகள்<br>• தலைமைத்துவம் 02 புள்ளிகள்<br>• தொடர்பாடல் திறமை 01 புள்ளிகள் | | 05 |
| | மொத்தம் | | 100 |

**கவனிக்க.-** சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நேர்முகப் பரீட்சையில் அத்தாட்சிப்படுத்தப்படும் தகைமைகளுக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். அனைத்து பாடநெறிகளும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட/ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தால் நடத்தப்படும் பாடநெறியாக இருக்க வேண்டும்.

ii. இலங்கை தொழினுட்ப சேவையின் அதிவிசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்றதன் அடிப்படையில் ஏற்புடைய பதவிக்கான நியமனம் வழங்கப்படும் என்பதுடன் பதவி உயர்வுத் திகதி நேர்முகப் பரீட்சைத் திகதியாகும். இந்த பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி பதவியில் கடமைகளை ஏற்கும் திகதியாகும்.

4. **இந்தப் பதவிக்கான சம்பளத்திட்டம்**:

அ. நி. சு. 03/2016 பிரகாரம் MN 7-2016 சம்பளத் தொகுதியின், மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 41,580-11x755-18 x 1,030 - ரூபா 68,425.00 ஆகும்.

5. **விண்ணப்பங்களை அனுப்புதல்** :

பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், விண்ணப்பம் கோருவதற்கான இறுதித் திகதியான 2025.01.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பதாரர்களால் தமது பிரிவுத் தலைவர் ஊடாக ''பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம், த. பெ. இல. 556, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10'' எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் வந்து ஒப்படைத்தல் வேண்டும். கடிதவுறையின் இடப்பக்க மேல் மூலையில் ''கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில் இலங்கை தொழினுட்ப சேவையில் அதிவிசேட தரத்தின் பிரதான பணிப் பரிசோதகர் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை'' என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
சுற்றாடல் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப் படிவம்

சுற்றாடல் அமைச்சு

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில் இலங்கை தொழினுட்ப சேவையில் அதிவிசேட தரத்தின் பிரதான பணிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்தசேர்த்தல் - 2024**

அலுவலக உபயோகத்திற்காக மட்டும் [ ]

01. பெயர் :

1.1 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :.....................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் உதா : SILVA A.B.)

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :
.....................................................................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3 முழுப் பெயர் (தமிழில்) :
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

02. 2.1 தனிப்பட்ட முகவரி :.....................................................................................................................
.....................................................................................................................................................

2.2 அலுவலக முகவரி :......................................................................................................................
.....................................................................................................................................................

2.3 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :.......................................................................................
.....................................................................................................................................................

2.4 தொலைபேசி இலக்கம் :..................................................................................

03.

3.1 பிறந்த திகதி : ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

3.2 விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் : ...................... மாதங்கள் :............... நாட்கள் :..........

3.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: [ | | | | | | | | | | | ]

04. 4.1 ஆண்/ பெண் பாலினம்: பெண் [ ]
ஆண் [ ]

4.2 விவாகமானவர்/விவாகமாகாதவர்/விதவை/தபுதாரர் என்பது பற்றி : விவாகமானவர் [ ]
விவாகமாகாதவர் [ ]
விதவை/ தபுதாரர் [ ]

05. இலங்கை தொழினுட்ப சேவைக்கு முதலில் நியமனம் பெற்ற திகதி : ......................................................

06. இலங்கை தொழினுட்ப சேவை தரம் I இற்கு பதவியுயர்வு பெற்ற திகதி : ......................................................

07. இலங்கை தொழினுட்ப சேவைக்கு உரிய தொழினுட்ப உதவியாளர் (சிவில்/எந்திரவியல்) அல்லது திட்ட வடிவமைப்பாளர் ஆகிய பதவி ஒன்றின் தரம் I இல் 06 ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலம் பூர்த்தியடையும் திகதி: .......................................................

08. தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்/எந்திரவியல்) அல்லது திட்ட வடிவமைப்பாளர் ஆகிய பதவி ஒன்றின் தரம் I உத்தியோகத்தர் ஒருவராக சேவை செய்துள்ள சேவைக்காலம்: .......................................................

09. மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்துள்ளீரா? ஆம்/ இல்லை/ ஏற்புடையதன்று.

10. அண்மித்த 05 ஆண்டுகளுக்குள் சகல சம்பளவேற்றங்களும் உழைக்கப்பட்டுள்ளதா? ஆம்/இல்லை

11. கல்வித் தகைமைகள் ( ✓ அடையாளம் இடவும்)

| | |
|---|---|
| பட்டம் | |
| க.பொ.த. (உ. தரம்) | |
| க.பொ.த. (சா. தரம்) | |

12. தொழிற் தகைமைகள்

| பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில் தகைமைகள் | காலம் |
|---|---|
| | |
| | |
| | |

13. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட சகல தகவல்களும் உண்மையானதும், சரியானதுமென இத்தால் உறுதிசெய்கிறேன். நான் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்ட முன்னர் இங்கு குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு தகவல் உண்மைக்குப் புறம்பானதென தெரியவருமாயின் நான் தகைமையற்றவனாக கருதப்படுவேன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரியவருமாயின் எந்தவித இழப்பீடும் இன்றி நான் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :..........................................

---

**திணைக்களத் தலைவரால் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.**

01. இந்த உத்தியோகத்தர் அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று தண்டனை பெற்றுள்ளாரா?/எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கருதப்படுகிறதா? என்பது பற்றி? ஆம்/ இல்லை.

02. பதில் ‘‘ஆம்’’ எனில் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

03. உத்தியோகத்தர் சேவைக் காலத்தில் சம்பளமற்ற லீவு பெற்றுள்ளாரா? ஆம்/இல்லை.

04. பதில் ''ஆம்'' எனில் பெற்றுக்கொண்ட சம்பளமற்ற லீவுகளின் எண்ணிக்கை யாது?

| *தொ. இல.* | *லீவு அனுமதிக்கு ஏற்புடைய நிபந்தனை* | *கால எல்லை* | |
|---|---|---|---|
| | | *முதல்* | *வரை* |
| i. | தாபன விதிக்கோவை <V:2:5:4 | | |
| ii. | தாபன விதிக்கோவை <XII:16 | | |
| iii. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல.10 | | |
| iv. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 33 | | |
| v. | தாபன விதிக்கோவை <XII:36 | | |
| vi. | ஏனைய சம்பளமற்ற லீவு | | |

இத்திணைக்களத்தில் ................................................. பதவி வகிக்கும் ............................................................ இன் விண்ணப்பப்படிவத்தை பரிந்துரை செய்து சமர்ப்பிக்கிறேன்.

.......................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
பதவி முத்திரை

திகதி : ………………………………………..

01-670

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

### களஅலுவலக உத்தியோகத்தர் தொகுதி – 02 சேவை வகையின் (MN 05 - 2006 A) இதய நுரையீரல் செயற்பாட்டு உத்தியோகத்தர் - II ஆம் தர பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2024

1.0. சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களுக்கு வெளிக்கள/அலுவலக உத்தியோகத்தர் தொகுதி – 02 சேவை வகையின் (MN 05 - 2006 A) இதய நுரையீரல் செயற்பாட்டு உத்தியோகத்தர் பதவியின் II ஆம் தர பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்க்கும் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0. **ஆட்சேர்க்கும் முறை :**
அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்துகின்ற விண்ணப்பதாரர்களில் இருந்து சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில், அதிகபட்ச புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் தேக ஆரோக்கியம் மற்றும் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகத் தேர்வொன்றிற்கு உட்படுத்தியதன் பின்னர் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

3.0. நிலவுகின்ற வெற்றிடங்களின் கீழ் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்குவரும் திகதி என்பன சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுசெயலாளரினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கும் / நிரப்பாமல் இருப்பதற்கும் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4.0. **மொழி மூலம்** :- இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தமது விருப்பின் பிரகாரம் யாதேனுமொரு மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். அவ்வாறு விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

5.0. இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5.1 **பிற தகைமைகள் :**

01. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.
02. விண்ணப்பதாரர் சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
03. விண்ணங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதியாகுகையில் தேவைப்படும் அனைத்து தகைமைகளையும் விண்ணப்பதாரர்கள் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

5.2 **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதிகவியலினைப் பாடமொன்றாகக் கொண்ட வகுப்புச் சித்தியுடன் கூடிய விஞ்ஞானமானிப் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

5.3. **தேக ஆரோக்கியம்:**

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராதல் வேண்டும்.

06. **வயதெல்லை:**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் 21 வருடங்களுக்கு குறையாமலும், 35 வருடங்களுக்கு மேற்படாதவராவும் இருத்தல் வேண்டும்.

07. **சம்பளப் பரிமாணம்:**

25-02-2016 ஆந் திகதியுடைய 03/2016 இலக்கம் கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் உபஅட்டவணை 1 இன் படி இப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பளப் பரிமாணம் ரூ. 34,605 – 10 x 660 – 11 x 755 – 15x930 – ரூபா 63,460 (MN 05 – 2006(ஏ) ஆகும்.

08. **எழுத்துப் பரீட்சை:**

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* | *நேரம்* | *உச்ச புள்ளிகளின் அளவு* | *தேர்ச்சிப் புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | சொற்கள் மற்றும் உருவ அமைப்புக்களாக முன் வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் எடுக்கும் முடிவுகள் மற்றும் வழங்கின்ற பதில்களின் அடிப்படையில் குறித்த சிக்கல்கள் பற்றிய கிரகிப்புத்திறன், கணிப்பீடு மற்றும் நேரம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவற்றுக்கிடையேயான தொடர்புகளை புரிந்து கொள்வதில் பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமையினை அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. | 1 ½ மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பொது வினாப்பத்திரம் | தேசிய, வலய மற்றும் உலகின் பல்வேறுபட்ட நிறுவனக் கட்டமைப்புக்களைப் போன்றே, எமது சமூகத்தினுள் காணப்படும் சமூகவியல், மரபுரிமை, கல்வி, அரசியல், பொருளியல் மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பிலான பொதுவான அறிவு பற்றிய பரீட்சார்த்தியின் விழிப்புணர்வு மற்றும் புரிதலினை அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. | 03 மணித்தியாலம் | 100 | 40% |

குறிப்பு -

(அ) அலுவலகப் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பரீட்சார்த்திகளின் தகைமைகள் மற்றும் திறமைகள் என்பவற்றினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாத்தாள்கள் தயாரிக்கப்படும்.

(ஆ) அனைத்து எழுத்து மூல வினாத்தாள்கள் தொடர்பாகவும் தெளிவற்ற கையெழுத்துக்கள் மற்றும் சொற்களின் எழுத்துப் பிழைகள் என்பன தொடர்பாக புள்ளிகள் குறைக்கப்படும்.

**09. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**

I. ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற இணங்குதல் வேண்டும்.

II. இந் நியமனம் நிரந்தரமானது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்குத் தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது பணிக்கப்படுகின்ற விதத்தில் தங்களினால் அதற்கான உதவுத் தொகைகளைச் செலுத்துதல் வேண்டும்.

III. பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 18/2020 இன் படி அரசகரும மொழி பற்றிய குறித்த தேர்ச்சியினை பூரணப்படுத்துதல் வேண்டும்.

IV. இந்த நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

V. இந் நியமனம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்கள ரீதியிலான ஏனைய கட்டளைகளுக்கும் உட்பட்டதாகும்.

**10. விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.**

I. அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரியொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பங்களை ஏ-4 அளவிலான தாளொன்றில் தயாரித்து, முதற் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 06 வரையிலும் 02 ஆம் பக்கத்தில் இலக்கம் 07 முதல் 10 வரையிலும் உள்ளடங்கும் வண்ணம் தயார் செய்து, அதனைத் தமது கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும்.

II. விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதி 2025.02.14 ஆகும். விண்ணப்பங்களை 2025.02.14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ''பணிப்பாளர் (நிர்வாகம்) 07, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.''

III. விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இதய நுரையீரல் செயற்பாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு (திறந்த) ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

IV. இது தொடர்பிலான எதிர்கால கடிதப் பரிமாற்ற நடவடிக்கைகள் மின்னஞ்சல் மூலமும் மேற்கொள்ளப்பட முடியும். ஆதலால், பாவனையில் உள்ள தங்களது மின்னஞ்சல் முகவரியொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் கட்டாயமாவதுடன், அது தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

V. பரீட்சைக் கட்டணம் ரூ. 1000.00 ஆகும். எந்தவொரு காரணத்தினைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இலங்கை வங்கியின் தப்பிரபேன் கிளையில் ''சுகாதார செயலாளர்'' பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318 கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வண்ணம் இத் தொகையினை இலங்கை வங்கியின் ஏதேனுமோர் கிளைக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ள கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும். (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

VI. அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணை பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது இலங்கை நிர்வாக சேவையின்/ கல்வி நிர்வாக சேவையின் / அரச கணக்காளர் சேவையின் ரூ. 240,360.00 இலும் கூடிய அடிப்படை வருடாந்த சம்பளமொன்றினைப் பெறும் அரசின் நிரந்தரப் பதவியொன்றினை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

VII. தற்சமயம் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தங்கது விண்ணப்பங்களை தாம் சேவை புரியும் திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

VIII. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் வடிவத்திற்குப் புறம்பான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணமாற் போதல் அல்லது தாமதமாதல் பற்றிய எந்தவோர் முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமை உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முன்கூட்டிய முடிவின் அடிப்படையில் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறியத்தரப்படும். (அனைத்து விதங்களிலும் பூரணமான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதார்கள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.)

11. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :** விண்ணப்பதாரர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சை மண்டபத்தில் நுழையும் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள இயலும் வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்தில் உள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைமண்டபத்திற்கு உள்வாங்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சைமண்டபத்தில் உள்நுழைந்த நேரத்தில் இருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை மண்டப உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பதாரியை இனங்காணக் கூடிய வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாது இருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக பரீட்சை தொடர்பில் தேவைப்படக் கூடிய பிற அறிவுறுத்தல்கள் பரீட்சை அனுமதி அட்டை மூலம் தங்களிடத்தே அறியத் தரப்படும். பரீட்சை தொடர்பிலான இந் நியமங்களுக்கு முரணாக கருமமாற்றும் விண்ணப்பதாரிகளை பரீட்சை மண்டபத்திற்கு உள்வாங்காமை / பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரம் மண்டப பொறுப்பாளரைச் சாரும்.

12. **போலியான தகவல்களை வழங்குதல்:**

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபணமாயின் தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிரூபணமாயின், அதற்கு ஏற்புடைய செயல்முறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், அவ்விடத்தே சிங்கள மொழியிலான வாசகம் செல்லுபடியாதல் வேண்டும்.

வைத்தியர் அனில் ஜாசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு,
''சுவசிரிபாய'',
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10,
2024, திசெம்பர் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் இதய நுரையீரல் செயற்பாட்டு உத்தியோகத்தர் - II ஆம் தர பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2024

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:- ☐ வதிவிட மாவட்டம் - ☐
(சிங்களம் – S/ தமிழ் – T/ ஆங்கிலம் - E)

01. 1.1 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடனான பெயர்:- Mr./Mrs/Miss ...........................

.......................................................................................................................

(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்) உதாரணம்:- Mr./~~Mrs/Miss~~ SILVA A.B.

1.2 முழுப் பெயர் :- ....................................................................................

(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்)...............................................................................

1.3 முழுப் பெயர் :- ....................................................................................

(சிங்களத்தில்/தமிழில்) ........................................................................................

02. 2.1 முகவரி (சொந்த) :- ....................................................................................

(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்)...............................................................................

2.2 முகவரி (சொந்த) :- ....................................................................................

(சிங்களத்தில்/ தமிழில்) ........................................................................................

2.3 முகவரி (கடமை) :- ....................................................................................

(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்)...............................................................................

2.4 முகவரி (கடமை) :- ....................................................................................

(சிங்களத்தில்/ தமிழில்) .....................................................................................

(முகவரியில் மாற்றங்கள் ஏற்படின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

2.5 தொலைபேசி இலக்கம் (சொந்த) :- .....................................................

2.6 தொலைபேசி இலக்கம் (அலுவலக) :- ......................................................

2.7 மின்னஞ்சல் முகவரி (email address):- .......................................................

03. 3.1 பிறந்த திகதி:- ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.2 விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதியில் வயது

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. பால் :- .........................................................

06. தகைமைகள்:-

6.1 ஏற்புடைய கல்வித் தகைமைகள்:-

.......................................................................................................................

.......................................................................................................................

6.2 தொழில்சார் தகைமைகள்:-

.......................................................................................................................

.......................................................................................................................

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:-

7.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளை :-.........................................

7.2 பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :-..............................................................

7.3 செலுத்திய தொகை :- ............................................................

| |
|---|
| இலங்கை வங்கிக் கிளையொன்றில் ரூ. 1000.00 எனும் தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை கழறாத வண்ணம் இங்கு ஒட்டவும். |

08. விண்ணப்பதாரரின் உறுதியுரை:-

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மை மற்றும் சரியானவை என மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் அடங்கியுள்ள ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அவ்விண்ணப்பம் இரத்தாகும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி: ................................ ......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

09. விண்ணப்பதாரரின் ஒப்பத்தினை உறுதிப்படுத்துதல்:

இவ் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி. ................................................. என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ..................... ஆந் திகதி அவரது கையொப்பத்தினை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................
உறுதிப்படுத்துபவரின் ஒப்பம்
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம்
உறுதிப்படுத்துதல் வேண்டும்).

முழுப் பெயர் :- ..........................................................................................................
பதவி :- ..........................................................................................................
முகவரி :- ..........................................................................................................

10. திணைக்கள/நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல்:- (அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும்)

இவ் விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ........................................................... இத் திணைக்களத்தில்/மாகாண சபையில் /நிறுவனத்தில் ........................................ ஆந் திகதி முதல் சேவையாற்றுகின்றார். அவர் இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப்பட மாட்டார் எனவும், ......................... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் ஒப்பம்

பெயர் :- ...............................................................................................
பதவிப் பெயர் :- ...............................................................................................
திகதி :- ...............................................................................................
திணைக்களம்/ நிறுவனம் :-...............................................................................................
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்).

01-67/1

**சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு**

## களஃஅலுவலக உத்தியோகத்தர் தொகுதி – 02 சேவை வகையின் (MN 05 - 2006 A) இதய நுரையீரல் செயற்பாட்டு உத்தியோகத்தர் - II ஆம் தர பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2024

1.0. சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களுக்கு வெளிக்கள/அலுவலக உத்தியோகத்தர் தொகுதி – 02 சேவை வகையின் (MN 05 - 2006 A) இதய நுரையீரல் செயற்பாட்டு உத்தியோகத்தர் பதவியின் II ஆம் தர பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்க்கும் பொருட்டு கீழ்க் குறிப்பிப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0. **ஆட்சேர்க்கும் முறை :**

அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்துகின்ற விண்ணப்பதாரர்களில் இருந்து, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில், அதிகபட்ச புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் தேக ஆரோக்கியம் மற்றும் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகத் தேர்வொன்றிற்கு உட்படுத்தியதன் பின்னர் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

3.0. நிலவுகின்ற வெற்றிடங்களின் கீழ் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்குவரும் திகதி என்பன சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்களை முழுமையாக நிரப்புவதற்கும் / நிரப்பாமல் இருப்பதற்கும் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4.0. **மொழி மூலம்** :

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தமது விருப்பின் பிரகாரம் யாதேனுமொரு மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். அவ்வாறு விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

5.0. **தேவையான அடிப்படைத் தகைமைகள்**:

5.1 **கல்வித் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானமானிப் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

5.2 **அனுபவம்**

குறைந்தபட்சம் 05 வருட அனுபவம் கொண்ட தாதிய உத்தியோகத்தர் ஆதல்.

5.3 **தேக ஆரோக்கியம்**:

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராதல் வேண்டும்.

5.4 **பிற தகைமைகள்**

- விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதியாகுகையில் தேவைப்படும் அனைத்து தகைமைகளையும் விண்ணப்பதாரர்கள் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

*குறிப்பு*

1. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் பத்திரங்கள் கோருகின்ற இறுதித் தினத்திற்கு முந்திய ஐந்து வருட காலப் பகுதியினுள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இங்கு திருப்திகரமான சேவை என்பதன் மூலம் பின்வரும் விடயங்கள் கருதப்படுகின்றன.

(i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் தினத்திற்கு முந்திய ஐந்து வருட காலத்தினுள் கிடைக்கப்பெறுகின்ற அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல்.

(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி தினத்திற்கு முந்திய 05 வருட காலப் பகுதியினுள் எதுவித ஒழுக்காற்று தண்டனைக்கும் ஆளாகாது இருத்தல்.

2. நியமனம் பெறுவதற்கு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படின் அவரை விடுவிப்பதற்காக திணைக்களத் தலைவரின் இணக்கம் காணப்படல் வேண்டும்.
3. சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, அவற்றின் கீழுள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் பணியாற்றுகின்ற தற்காலிக மற்றும் அமய ஊழியர்கள் ஆகியோர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர்களாவர்.
4. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை தாம் பூர்த்தி செய்துள்ளதாக விண்ணப்பிப்பதற்கு முன்னர் விண்ணப்பதாரர்கள் திருப்தியடைதல் வேண்டும். இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இன்றி இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் பரீட்சையில் போதிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட போதிலும் நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவர்களாவார்கள்.

6.0. **வயதெல்லை**: ஏற்புடையதல்ல.

7.0. **சம்பளப் பரிமாணம்:**

25-02-2016 ஆந் திகதியுடைய 03/2016 இலக்கம் கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் உபஅட்டவணை 1 இன் படி இப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பளப் பரிமாணம் ரூபா 34,605.00 – 10x 660 – 11 x 755 – 15x930 – ரூபா 63,460.00 (MN 05 – 2006(ஏ) ) ஆகும்.

8.0 **எழுத்துப் பரீட்சை** :

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* | *நேரம்* | *உச்ச புள்ளிகளின் அளவு* | *தேர்ச்சிப் புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | சொற்கள் மற்றும் உருவ அமைப்புக்களாக முன் வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் எடுக்கும் முடிவுகள் மற்றும் வழங்கின்ற பதில்களின் அடிப்படையில் குறித்த சிக்கல்கள் பற்றிய கிரகிப்புத்திறன், கணிப்பீடு மற்றும் நேரம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவற்றுக்கிடையேயான தொடர்புகளை புரிந்து கொள்வதில் பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமையினை அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. | 1 ½ மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பொது வினாப்பத்திரம் | தேசிய, வலய மற்றும் உலகின் பல்வேறுபட்ட நிறுவனக் கட்டமைப்புக்களைப் போன்றே, எமது சமூகத்தினுள் காணப்படும் சமூகவியல், மரபுரிமை, கல்வி, அரசியல், பொருளியல் மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பிலான பொதுவான அறிவு பற்றிய பரீட்சார்த்தியின் விழிப்புணர்வு மற்றும் புரிதலினை அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. | 03 மணித்தியாலம் | 100 | 40% |

9.0 **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

I. ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற இணங்குதல் வேண்டும்.

II. இந் நியமனம் ஓய்வூதிய உரித்துடையது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்குத் தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது பணிக்கப்படுகின்ற விதத்தில் தங்களினால் அதற்கான உதவு தொகைகளைச் செலுத்துதல் வேண்டும்.

பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 18/2020 இன் படி அரச கரும மொழி பற்றிய குறித்த தேர்ச்சியினை பூரணப்படுத்துதல் வேண்டும்.

I. இந்த நியமனம் 01 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

II. இந் நியமனம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்கள ரீதியிலான ஏனைய கட்டளைகளுக்கும் உட்பட்டதாகும்.

10. விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்.

I. அனுப்பப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரியொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பங்களை ஏ-4 அளவிலான தாளொன்றில் தயாரித்து, முதற் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 06 வரையிலும் 02 ஆம் பக்கத்தில் இலக்கம் 07 முதல் 10 வரையிலும் உள்ளடங்கும் வண்ணம் தயார் செய்து, அதனைத் தமது கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும்.

II. ஒவ்வொரு விண்ணப்பதாரரும்/விண்ணப்பதாரரும் அச்சடித்து பூர்த்திசெய்த அனைத்து விண்ணப்பங்களும் 2025.02.14 க்குள் முதல் நிறுவனத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், மேலும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும்/விண்ணப்பதாரரும் சமர்ப்பித்த தகவல்கள் உண்மை மற்றும் சரியானவை என்று அவர் தனிப்பட்ட முறையில் சான்றளித்த பிறகு, அனைத்து விண்ணப்பங்களும் இருக்க வேண்டும். (இயக்குனர்) 07, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, 385, வண. பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு 2025.02.14 க்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

III. விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இதய நுரையீரல் செயற்பாட்டு உத்தியோகத்தர் பதவிக்கு (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

IV. இது தொடர்பிலான எதிர்கால கடிதப் பரிமாற்ற நடவடிக்கைகள் மின்னஞ்சல் மூலமும் மேற்கொள்ளப்பட முடியும். ஆதலால் பாவனையில் உள்ள தங்களது மின்னஞ்சல் முகவரியொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் கட்டாயமாவதுடன், அது தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

V. பரீட்சைக் கட்டணம் ரூ. 1000.00 ஆகும். எந்தவொரு காரணத்தினைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இலங்கை வங்கியின் தப்பிரபேன் கிளையில் 'சுகாதார செயலாளர்' பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318 கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வண்ணம் இத் தொகையினை இலங்கை வங்கியின் ஏதேனுமோர் கிளைக்குச் செழுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ள கூண்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும் (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

VI. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் வடிவத்திற்குப் புறம்பான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணமற் போதல் அல்லது தாமதமாதல் பற்றிய எந்தவோர் முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமை உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முன்கூட்டிய முடிவின் அடிப்படையில் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறியத் தரப்படும். முகவரிக்கு அறிவிக்கப்படும்.(அனைத்து விதங்களிலும் பூரணமான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.)

11. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

விண்ணப்பதாரர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம்; சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) தேசிய ஆளடையாள அட்டை;

(ii) செல்லுபடியான கடவுச் சீட்டு;

(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சை மண்டபத்தில் நுழையும் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள இயலும் வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்தில் உள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள்வாங்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் உள்நுழைந்த நேரத்தில் இருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை மண்டப உத்தியோகத்தர்களுக்கு

விண்ணப்பதாரியை இனங்காணக் கூடிய வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாது இருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக பரீட்சை தொடர்பில் தேவைப்படக் கூடிய பிற அறிவுறுத்தல்கள் பரீட்சை அனுமதி அட்டை மூலம் தங்களிடத்தே அறியத் தரப்படும். பரீட்சை தொடர்பிலான இந் நியமங்களுக்கு முரணாக கருமமாற்றும் விண்ணப்பதாரிகளை பரீட்சை மண்டபத்திற்கு உள்வாங்காமை / பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரம் மண்டப பொறுப்பாளரைச் சாரும்.

**12. போலியான தகவல்களை வழங்குதல்:**

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபணமாயின் தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிரூபணமாயின், அதற்கு ஏற்புடைய செயல்முறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், அவ்விடத்தே சிங்கள மொழியிலான வாசகம் செல்லுபடியாதல் வேண்டும்.

வைத்தியர் அனில் ஜாசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு,
'சுவசிரிபாய',
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
2024, திசெம்பர் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் இதய நுரையீரல் செயற்பாட்டு உத்தியோகத்தர் - II ஆம் தர பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2024

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:- (சிங்களம் – S / தமிழ் -T/ ஆங்கிலம் - E) [ ]    வதிவிட மாவட்டம் - [ ]

01. 1.1 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களுடனான பெயர்:- Mr./Mrs/Miss ..........................
..............................................................................................................
(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்) உதாரணம்:- Mr./~~Mrs/Miss~~ SILVA A.B.

1.2 முழுப் பெயர் :- ....................................................................................
(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்)................................................................................

1.3 முழுப் பெயர் :- ....................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்) ........................................................................................

02. 2.1 முகவரி (சொந்த) :- ....................................................................................
(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்)................................................................................

2.2 முகவரி (சொந்த) :- ....................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்) ........................................................................................

2.3 முகவரி (கடமை) :- ....................................................................................
(ஆங்கிலப் பேரெழுத்துக்களில்)................................................................................

2.4 முகவரி (கடமை) :- ....................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்) ......................................................................................

(முகவரியில் மாற்றங்கள் ஏற்படின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

2.5 தொலைபேசி இலக்கம் (சொந்த) :- ......................................................

2.6 தொலைபேசி இலக்கம் (அலுவலக) :- ......................................................

2.7 மின்னஞ்சல் முகவரி (email address):- ......................................................

03. 3.1 பிறந்த திகதி:- வருடம்: | | | | | மாதம்: | | | திகதி: | | |

3.2 விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதியில் வயது

வருடங்கள்: | | | மாதங்கள்: | | | நாட்கள்: | | |

04. தேசிய அடையாள அட்டை இலக்கம்:-

05. பால் :- .........................................................

06. தகைமைகள்:-

6.1 ஏற்புடைய கல்வித் தகைமைகள்:-

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

6.2 தொழில்சார் தகைமைகள்:-

..................................................................................................................................................................

..................................................................................................................................................................

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:-

7.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய இலங்கை வங்கிக் கிளை :-.........................................

7.2 பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :-..............................................................

7.3 செலுத்திய தொகை :- .............................................................

| |
|---|
| இலங்கை வங்கிக் கிளையொன்றில் ரூ. 1000.00 எனும் தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை கழறாத வண்ணம் இங்கு ஒட்டவும். |

08. இந்த விண்ணபத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையான மற்றும் சரியான தகவல்கள் கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் அடங்கும் ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அவ்விண்ணப்பம் இரத்தாகும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எவ்வித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி: ................................ ......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

09. **திணைக்கள / நிறுவனத் தலைவரினால் பூரணப்படுத்தப்பட வேண்டிய விபரங்கள்:**

i. உத்தியோகத்தரின் பெயர்: ..........................................................................................................................

ii. உத்தியோகத்தரின் தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..........................................................................

iii. பரீட்சைக்கு விண்ணப்பிக்கையில் வகித்த பதவி: .........................................................................................

iv. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான 05 வருட சேவைக் காலம் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா? ..........................................................................................................

v. பதவியில் நிரந்தரப்படுத்திய வண்ணம், நிரந்தரப்படுத்தும் கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளதா? (அவ்வாறாயின் அக்கடிதத்தின் உறுதிப்படுத்திய பிரதியொன்றினை இணைக்கவும்.) ..........................................................................
..................................................................................................................................................................

vi. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முந்திய 05 வருட காலப்பகுதியினுள் அனைத்து சம்பளவேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளாரா? .....................................

vii. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு முந்திய 05 வருட காலப்பகுதியினுள் ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா? .....................................

viii. தற்சமயம் ஒழுக்காற்று விசாரணைகள் இடம் பெறுகின்றனவா? ..........................................

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி. .................................................................. இந் நிறுவனத்தில் ............................ ஆந் திகதி முதல் சேவையாற்றுகின்றார். அவர் நிரந்தர ஓய்வூதியம் கொண்ட பதவியொன்றினை வகிக்கின்றார். கடந்த .......... வருட காலப்பகுதியினுள் அவர் அனைத்து சம்பளவேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் எனவும், அவர் ஏதேனுமோர் ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைக்கு (எச்சரித்தல் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை எனவும், மேலே 09 ஆம் விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் இவ் அலுவலகத்தில் உள்ள அறிக்கைகளின் அடிப்படையில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன எனவும், அவை சரியானவை எனவும், அவர் இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்பட மாட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................

திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்

கையொப்பம் :- ..................................................................................................

பெயர் :- ..................................................................................................

பதவிப் பெயர் :- ......................................................................................................

திகதி :- .......................................................................................................

திணைக்களம்/ நிறுவனம் :-...........................................................................................

(இறப்பர் இலச்சினை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்).

(கவனத்திற் கொள்ளவும்:- வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உரிய கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பூரணப்படுத்தியிராத உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை அனுப்பாமல் இருப்பதற்கு நிறுவனத் தலைவர்கள் கருத்தாயிருத்தல் வேண்டும்).

01-67/2

---

## வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

### வெளிநாட்டில் உள்ள இலங்கை தூதரகப் பணியகங்களில் முகாமைத்துவ சேவை அலுவலர்கள் சேவைப் பணிநிலைப்பிரிவில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப்பரீட்சை - 2024 (2025)

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகப் பணியகங்களில் தாய்நாட்டு நியமன அடிப்படையிலான முகாமைத்துவ சேவை அலுவலர் பணிநிலைப் பிரிவிலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் சார்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் 2025, ஏப்ரல் மாதம் நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்குத் தகுதியுள்ள முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி முகாமைத்துவ உதவியாளர் சேவைகளில் இருப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இது தொடர்பான விண்ணப்பம், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் இணையதளமான, www.doenets.lk இலுள்ள "எமது சேவைகள்" என்னும் பகுதியின் கீழுள்ள, "நிகழ்நிலை விண்ணப்பங்கள்-ஆட்சேர்ப்புப் பரீட்சைகள்" என்பதன் கீழ் காணப்படுவதுடன், விண்ணப்பங்கள் நிகழ்நிலை (online) முறை மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் 2025, ஜனவரி 17 அன்று மு.ப. 9.00 மணி முதல் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 2024, பெப்ரவரி 17 அன்று பி.ப. 9.00 மணி வரை ஆகும். இதற்கான பரீட்சை 2025, ஏப்ரல் மாதம் கொழும்பில் நடைபெறும்.

02. **தகைமை.-** முகாமைத்துவ சேவை அலுவலர்கள்/மாகாண முகாமைத்துவ சேவை அலுவலர்கள்/ உள்ளூராட்சி முகாமைத்துவ அலுவலர் சேவைகளில் உள்ள விண்ணப்பதாரர்கள் ("சேவை" என குறிப்பிடப்படுகின்ற) விண்ணப்பிக்கும் திகதியில், பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:

(அ) அலுவலர் மேற்குறிப்பிட்ட சேவைக்குரிய தரம் I அல்லது தரம் II இல் உள்ளவராக

அல்லது

(ஆ) அலுவலர், மேற்குறிப்பிட்ட சேவையின் தரம் III இல் குறைந்தது 5 வருட திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** மேற்குறிப்பிட்ட சேவைகளில் அல்லாத பிற முகாமைத்துவ சேவைகளிலுள்ள அலுவலர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவர்களாவர்.

(இ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் தினத்தில் விண்ணப்பதாரரின் பதவி மற்றும் பணியிடம் என்பன பரீட்சை தொடர்பான சகல விடயங்களிலும் பொருந்துவதுடன், விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 57 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். (அதன்படி, 1968, பெப்புருவரி மாதம் 17 இற்குப்பின்னர் பிறந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்).

(உ) விண்ணப்பிக்கும் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருட காலப்பகுதியில் சகல வருடாந்த சம்பள அதிகரிப்புகளையும் உரிய திகதிகளில் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஊ) எச்சரிக்கை தவிர்த்த எந்தவிதமான ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.

(எ) தற்சமயம், வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகப் பணியகமொன்றில் சேவை புரியாதவராக இருத்தல் வேண்டும்.

(ஏ) அலுவலர் ஒருவர் முன்னர் வெளிநாட்டில் உள்ள இலங்கைத் தூதரகப் பணியகங்களில் சேவையாற்றியிருக்கும் பட்சத்தில், அவர் / அவள் குறித்த தூதரகப் பணியகத்தில் தனது சேவையின் பின்னர் இலங்கையில் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சில் அறிக்கை செய்த நாளிலிருந்து குறைந்தது மூன்று (03) வருடங்களைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

குறிப்பு:

i. தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரி ஒருவர் தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, முகாமைத்துவ சேவை அலுவலர்/ மாகாண முகாமைத்துவ சேவை அலுவலர்/ உள்ளூராட்சி மன்ற முகாமைத்துவ சேவை அலுவலர் ஆகிய சேவைகளின் வகுப்பு/ தரம் I இற்கு மேற்பட்ட தரமொன்றுக்கு பதவி உயர்த்தப்படும் பட்சத்திலோ அல்லது வேறு ஏதேனும் சேவையின் பதவியொன்றுக்கு நியமிக்கப்படும் பட்சத்திலோ வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகப் பணியகங்களில், தாய்நாட்டு அடிப்படையில் நியமனம் பெற்ற முகாமைத்துவ சேவை அலுவலர் பணிநிலைப்பிரிவிலுள்ள பதவிவெற்றிடம் ஒன்றை நிரப்புவதற்குத் தகுதியுடைவராக இருக்கமாட்டார். தனது, நிகழ்கால பதவிநிலையில், மேலே (அ) மற்றும் (ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவாறு ஏதேனும் மாற்றம் ஏற்படுமிடத்து, உடனடியாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளருக்குத் தெரிவிக்க வேண்டியது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும்.

ii. கணக்கியல் மற்றும் நிர்வாகப் பணிகளில் அனுபவம் மற்றும் ஆங்கில மொழியில் பணியாற்றும் திறனைக் கொண்டுள்ள அலுவலர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஏனைய வெளிநாட்டு மொழிகளில் பணியாற்றும் திறன் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

3. **தெரிவு செய்யும் முறை:** பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வு மற்றும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரால் நடாத்தப்படும் செயன்முறை மதிப்பீடு மற்றும் நேர்முகத்தேர்வு ஆகியவற்றின் மூலம் தெரிவுசெய்யப்படும்.

3.1 **பரீட்சை நடைமுறை**

(அ) எழுத்துப்பரீட்சை: எழுத்துப்பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும்.

| வினாத்தாள் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| கணக்கீட்டு முறைகள் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| தாபனக்கோவை மற்றும் அலுவலக நடைமுறைகள் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| ஆங்கிலமொழி | 2 மணித்தியாலங்கள் | 100 |

குறிப்பு:

1. **கணக்கீட்டு முறைகள்: –** செயல் நோக்கம் மற்றும் பாடம் சார்ந்த வினாக்களைக் கொண்டிருக்கும். இவ்வினாத்தாள் அரசாங்க நிறுவனமொன்றின் நிதிசார் தொழிற்பாடுகள் மற்றும் நடைமுறையில் உள்ள கணக்கீட்டுச் செயன்முறை ஆகிய விடயங்களில் விண்ணப்பதாரரின் அறிவைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கானதாகும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

2. **தாபன விதிக் கோவை மற்றும் அலுவலக நடைமுறைகள்: –** அரச நிறுவனமொன்றின் நிறுவன மற்றும் அலுவலக நடைமுறைகள் குறித்த விண்ணப்பதாரரின் செயன்முறை அறிவை பரீட்சிக்கவும், விடயப்பரப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய வினாக்கள் அடங்கலாக இவ்வினாத்தாள் தயாரிக்கப்படும். தரப்படும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

3. **ஆங்கிலமொழி: –** வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பிலான ஆவணங்கள், செய்திகள், கூட்ட அறிக்கை வரைவு, அறிவுறுத்தல்கள் போன்றவற்றுடன் இலக்கணம், கிரகித்தல் போன்ற எழுத்துருவிலான தொடர்பாடல் குறித்த விடயங்களில் விண்ணப்பதாரரின் அறிவு மற்றும் புரிதலைப் பரீட்சிப்பதற்காக இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. தரப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.

3.1 (ஆ) செயன்முறை மதிப்பீடு

| *வினாத்தாள்* | *காலம்* | *புள்ளிகள்* |
|---|---|---|
| செயன்முறை மதிப்பீடு | 80 நிமிடங்கள் | 60 |

குறிப்பு:

1. செயன்முறை மதிப்பீடு – நிதிசார் கணக்குகள், ஆங்கில மொழித்தேர்ச்சி, நிர்வாகச் செயன்முறைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திறன்கள் தொடர்பில் கணினியை அடிப்படையாகக்கொண்ட செயன்முறை மதிப்பீடு ஆகும்.
2. தரப்படும் நான்கு (4) வினாக்களில் ஒவ்வொன்றுக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும். மொத்தப்புள்ளிகள் 60 (15 x 4).
3. நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெறுவதற்கு, சகல விண்ணப்பதாரிகளும் செயன்முறை மதிப்பீட்டில் குறைந்தது 40% (60×40% = 24) பெற்றிருக்க வேண்டும்.

3.2 நேர்முகத்தேர்வு:

3.2.1 வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்படும் தேர்வுக்குழுவொன்றினால் நடாத்தப்படும் நேர்முகத்தேர்வுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.

3.2.2. அமைச்சினால் நடாத்தப்படவுள்ள வாய்மொழித் தேர்வுக்கான விரிவான புள்ளித்திட்டம் வருமாறு:

| *இல.* | *புள்ளியிடல் வகை* | *வழங்கப்படும் புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1 | **மேலதிகக் கல்வித் தகைமைகள்** | | 05 |
| | I. 1 ஆம் வகுப்புடனான பல்கலைக்கழகப் பட்டம் | 05 | |
| | II. 2 ஆம் வகுப்பின் மேல் பிரிவுடனான பல்கலைக்கழகப்பட்டம் | 04 | |
| | III. 2 ஆம் வகுப்பின் கீழ் பிரிவுடனான பல்கலைக்கழகப்பட்டம் | 03 | |
| | IV. சாதாரண சித்தியுடனான பல்கலைக்கழகப்பட்டம் | 02 | |
| | குறிப்பு : பட்டப்படிப்பின் கல்வியாண்டுகள் 3 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதுடன், மொழிமூலம் ஆங்கிலமாக இருத்தல் வேண்டும். | | |
| 2 | வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுடன் நேரடியாகத் தொடர்புடைய பிற/ தொழில்சார் தகைமைகள் ( சர்வதேச உறவுகள், சட்டம், ஆங்கிலம் அல்லது ஏனைய வெளிநாட்டு மொழிகள், தகவல் தொழினுட்பம், முகாமைத்துவம்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட, | | 10 |
| | I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட முதுகலைப்பட்டம் | 10 | |
| | II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட பட்டப்பின் டிப்ளோமா ( 1 வருடத்திற்குக் குறையாத) | 07 | |
| | III. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட டிப்ளோமா/ சான்றிதழ் மட்டத் தகைமை (6 மாதங்களுக்குக் குறையாத) | 05 | |
| 3 | **சேவை அனுபவம்** | | 10 |
| | i. தரம் III இன் முதல் 5 ஆண்டுகள் தவிர்ந்த எஞ்சியுள்ள ஒவ்வொரு திருப்திகரமான சேவைக் காலத்திற்கும் வருடத்திற்கு 0.3 புள்ளிகள். | 1.5 | |
| | ii. தரம் II மற்றும் I இல் உள்ள அதிகாரிகளின் மொத்தத் திருப்திகரமான சேவைக் காலத்திற்கு வருடத்திற்கு 0.4 புள்ளிகள் | 10 | |
| 4 | **நேர்முகப்பரீட்சையின் போதான செயற்திறன்** | | 15 |
| | I. தொடர்பாடல் திறன்கள் மற்றும் சரளமான ஆங்கில மொழித்திறன் | 05 | |
| | II. சர்வதேச விவகாரங்கள் தொடர்பிலான அறிவு | 03 | |
| | III. கலாச்சார உணர் வு | 03 | |
| | IV. நேர்மறை ரீதியிலான மனப்பாங்கு | 03 | |
| | V. ஆளுமை மற்றும் ஆயத்தநிலை | 01 | |
| | **மொத்தம்** | | **40** |

குறிப்பு: மேலே உள்ள அட்டவணையில் எண் 1, 2, 3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கப்படுவதற்கான அளவுகோல்களின் அடிப்படையில், விண்ணப்பத்திற்கான இறுதித் திகதியில் மேற்கண்ட அனைத்து தகுதிகளையும் விண்ணப்பதாரர் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**3.3 தெரிவு செய்யப்படும் முறை:**

3.3.1 ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் 40 வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப்பெற்று, மொத்தம் 150 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகள் செயன்முறை மதிப்பீட்டிற்கு அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாவர். ஆனபோதிலும், மேற்படி வெட்டுப் புள்ளிக்கமைவாக, போதிய எண்ணிக்கையிலான தகுதியடைந்த பரீட்சார்த்திகள் இல்லாதிருக்கும் பட்சத்தில், வெட்டுப்புள்ளியைத் தீர்மானிக்கும் அதிகாரம் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளருக்கு உண்டு. விண்ணப்பதாரிகள், செயன்முறை மதிப்பீட்டில் ஆகக்குறைந்தது 40% புள்ளிகள் (60 × 40% = 24) பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் நேர்முகத்தேர்வுக்கு ஆகக்குறைந்த வெட்டுப்புள்ளி எதுவும் இல்லை.

3.3.2 பந்தி 3.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, எழுத்துப்பரீட்சையில் தேர்ச்சி பெற்று, செயன்முறைப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றுவதற்குத் தகுதிபெற்றுள்ள விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்டு, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

செயன்முறை மதிப்பீட்டில் சித்தி பெற்ற விண்ணப்பதாரர்கள், நேர்முகத்தேர்வில் தோற்றிய மதிப்பெண்களைப் பெற்ற பிறகு, ஒவ்வொரு பரீட்சார்த்தியும் எழுத்துத் தேர்வு, செயன்முறை மதிப்பீடு மற்றும் நேர்முகத்தேர்வு ஆகியவற்றில் பெற்றுக்கொண்ட மொத்த மதிப்பெண்களின் தகுதி ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் பெறுபேற்றுத்தாள் தயாரிக்கப்பட்டு, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படும்.

மொத்த புள்ளிகளடங்கிய பெறுபெற்றுத்தாளில் உள்ள தகுதி வரிசையின் அடிப்படையில், இத்தேர்வில் முதன்முறையாக தகுதிபெறும் விண்ணப்பதாரர்களைக்கொண்டு 80% மான பதவி வெற்றிடங்களும், ஏற்கனவே தூதரகப் பணியகங்களில் பணியாற்றியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து 20% மான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

அத்துடன், பரீட்சைக்கு தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகள் நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

**பரீட்சைப் பெறுபேறுகள்** - பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலமாகவோ அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்படுவதன் மூலமோ பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

**4. விண்ணப்பித்தலும் அதற்கான நடைமுறையும்:**

4.1 நிகழ்நிலையிலான பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமென திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதைத் திணைக்களமானது, விண்ணப்பதாரர் கணினி முறைமையை அணுகப் பயன்படுத்திய தொலைபேசி இலக்கத்திற்கு, ஒரு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறிவிக்கும். நிகழ்நிலை விண்ணப்பித்தலுக்கான வழிகாட்டல் அறிவுறுத்தல்களைப் (Instructions) பதிவிறக்கம் செய்து, விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்ற பிறகு விண்ணப்பத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் ஏற்புடையதாகக் கருதப்படமாட்டாது. முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

4.2 விண்ணப்பத்தின் பிரதியொன்றை, விண்ணப்பதாரியின் தனிப்பட்ட கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், நிறுவனத் தலைவரால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி, சேவை உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் தற்போதைய பதவியில் இருந்து விடுவிக்கப்பட இயலுமென்பதை தெரிவிக்கும் கடிதம் ஆகியவை நேர்முகத்தேர்வின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4.3 முழுமையாகப்பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள், பரீட்சைகள் திணக்களத்தால் நிராகரிக்கப்படும். இறுதித் திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், கிடைக்கப்பெற்றதாகவும் அறிவிக்கப்படமாட்டாது.

5. பரீட்சைக்கட்டணம்:

(அ) பரீட்சைக்கட்டணம் ரூ.600.00 ஆகும். நிகழ்நிலை முறைமையில் கொடுக்கப்பட்டுள்ள பின்வரும் கட்டண முறைகள் மூலம் மட்டுமே, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படவேண்டும்:

I. ஏதேனும் ஒரு வங்கிகடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

II. இணைய பரிவர்த்தனை வசதிகள் கொண்ட ஏதேனுமொரு வங்கி வரவு அட்டையின் மூலம் (Any Bank Debit Card with The Internet Transaction Facility)

III. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)

IV. ஏதேனுமொரு இலங்கை வங்கிக்கிளை மூலம் (Slip payments of any branch of bank of Ceylon)

குறிப்பு: பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத் தளத்தின், பரீட்சைகள் தொடர்பிலான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ், மேற்படி முறைகள் மூலம் கட்டணம் செலுத்துதல் குறித்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் கிடைக்கப்பெற்றமை, குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கட்டணம் முழுமையாகச் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், பரீட்சைக்கட்டணத்துக்குக் குறைவான அல்லது அதிகமான கட்டணங்களுடனான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தும்போது ஏற்படக்கூடிய எவ்வித தவறுகளுக்கும் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) எந்தவொரு சூழ்நிலையிலும் பரீட்சைக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படமாட்டாது.

**6. பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி:**

6.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தில், அறிவித்தலில் குறிப்பிட்ட வயது எல்லைக்குள் அடங்குகின்ற, முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பரீட்சைக்கட்டணத்தைச் செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டு, பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைசமர்ப்பித்துள்ள, அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும், அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் அது தொடர்பிலான அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். அவ்வாறு வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பரீட்சைத் திணைக்களத்தின், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையில் விசாரித்தல் வேண்டும்.

6.2 அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, பரீட்சைக்கட்டணத்திற்கான பற்றுச்சீட்டு, பதிவுத்தபால் பற்றுச்சீட்டு ஆகியவற்றின் பிரதிகளுடன், விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைக் குறிப்பிட்டு பரீட்சைகள் திணைக்களத்திடம் விசாரிக்க வேண்டும் என்பதுடன், வெளிமாவட்ட விண்ணப்பதாரர்களெனில், மேற்குறிப்பிட்ட விடயங்களுடன், தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு, கோரிக்கைக் கடிதத்தை, அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலை நகல் இலக்கத்திற்கு அனுப்பிவைத்தால், பரீட்சைக்கான அனுமதி அட்டை கடிதத்தில் குறிப்பிட்ட தொலைநகலில் அனுப்பி வைக்கப்படும்.

6.3 அனுமதி அட்டையிலும் விண்ணப்பத்திலும் இடப்படும் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அத்தாட்சிப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி தனது கையொப்பத்தினை நிறுவனத்தலைவரிடமோ அல்லது நிறுவனத்தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறொரு அலுவலரிடமோ அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.4 விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். விண்ணப்பதாரர்கள் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அவ்வொழுங்குவிதிகளை

மீறும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேற்கொள்ளும் தீர்மானமே இறுதியானதாகும்.

6.5 பரீட்சைக்கான அனுமதி அட்டை விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுவதன் மூலம் விண்ணப்பதாரர் பரீட்சைக்கான தகைமைகள் அல்லது குறித்த பதவிக்கான தகைமைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படலாகாது.

7. **பரீட்சைக்கான மொழிமூலம்**:

7.1 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பம் அனுப்பப்பட்ட பின்னர் பரீட்சை எழுதும் மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7.2 எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், ஆங்கில வினாப்பத்திரம் தவிர்ந்த ஏனைய எல்லா வினாப்பத்திரங்களுக்கும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் ஏதேனும் ஒரு மொழி மூலத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும்.

7.3 செயன்முறை மதிப்பீடு ஆங்கில மொழி மூலத்தில் மாத்திரமே நடாத்தப்படும்.

8. **பொய்யான தகவல்களை வழங்குதலுக்கான தண்டனை:**

8.1 விண்ணப்பதாரர் சரியான தகவல்களை தனது விண்ணப்பத்தில் வழங்குதல் வேண்டும். பரீட்சை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி, விண்ணப்பதாரி பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ, பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர் என்பது உறுதிப்படுத்தப்படின், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

9. **பரீட்சார்த்தி தனது ஆளடையாளத்தை உறுதி செய்தல்**:

9.1 ஒரு விண்ணப்பதாரர், தான்தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது அடையாளத்தை நிரூபிக்குமாறு கோரப்படுவார். இந்நோக்கத்திற்கென பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்:

அ. தேசிய ஆளடையாள அட்டை
ஆ. செல்லுபடியான கடவுச்சீட்டு
இ. செல்லுபடியான வாகனச்சாரதி அனுமதிப்பத்திரம்

9.2 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழையும்போது, தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காகவும், தொடர்பாடற்கருவிகளை அணியவில்லை என உறுதிசெய்வதற்காகவும் தமது முகத்தையும் காதுகளையும் மூடுவதைத் தவிர்க்க வேண்டும். மேலும், எந்தவொரு பரீட்சார்த்தியும் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த ஒத்துழைக்க மறுப்பாரெனில், அவர் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல், பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறும் வரையில், மேற்பார்வையாளர்களால், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு ஏதுவாக, தமது முகம் மற்றும் காதுகளை மூடாமல் இருக்க வேண்டும்.

10. **பதவியில் அமர்த்துவதற்கான நியதிகள்:**

10.1 தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு இடமாற்றம் செய்யப்படுவர். அவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட நாளிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் அவர் / அவள் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சில் தமது கடமைகளை ஏற்கத்தவறும் பட்சத்தில், நியமனம் ரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படுவதுடன், அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு நிகழ்வுகளைத் தவிர, இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் எவ்வித மேல்முறையீடுகளும் (உ+ம். மகப்பேற்று விடுமுறை) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10.2 தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகப் பணியகங்களில், பணியமர்த்தப்படுவதற்கு முன்பாக, ஒரு வருட காலத்திற்கு, கட்டாயமாக கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சேவையாற்ற வேண்டும். வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சில் பணிபுரியும் இந்த ஆரம்ப காலப்பகுதியில், அவரது/அவளுடைய பணி மற்றும் நடத்தை தொடர்பில் சுயாதீன அதிகாரிகள் குழுவினால் மதிப்பீடு செய்யப்படுவதுடன், அவை திருப்திகரமானதாக இல்லாத பட்சத்தில், அவரது நியமனத் தெரிவு இரத்துச் செய்யப்படக்கூடும்.

10.3 ஒரு அதிகாரியின் நியமனமானது, தூதரகப் பணியகங்களின் தேவைகளின் அடிப்படையிலும், அவ்வதிகாரியின் பொருத்தப்பாடு மற்றும் தகுதி (வெளிநாட்டுமொழித் தேர்ச்சி போன்ற) அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். மாறாக அவ்வதிகாரிகளின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் குறைபாடுகளை (குழந்தைகளின் கல்வி, வாழ்க்கைத் துணையின் தொழில், மருத்துவ வசதிகள் போன்றவை) கவனத்திற்கொள்வது வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் கடமையல்லாததுடன், அதிகாரி, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்ட எந்தவொரு வெளிநாட்டுத் தூதரகப் பணியகத்திலும் தனது கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும். அதிகாரியொருவர், அவர் நியமிக்கப்பட்ட தூதரகப் பணியகத்தில் கடமையை ஏற்க மறுத்தால், அந்த அதிகாரியின் மேற்கூறிய நியமனம் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படுவதுடன், இது தொடர்பான கோரிக்கைகள்/மனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

10.4 வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகப் பணியகத்தில், நியமிக்கப்படும் அதிகாரியொருவர் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளருடன் மேற்கொண்ட கட்டாயச் சேவை உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி, சேவையாற்ற வேண்டும் என்பதுடன், இலங்கை வெளிநாட்டு தூதரகப் பணியகங்களின் சீரான செயற்பாட்டிற்கென காலத்திற்குக் காலம் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்படும் உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் தொடர் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டவற்றைப் பின்பற்றி, அதற்கேற்ப நடக்க வேண்டும்.

10.5 வெளிநாட்டு தூதரகப் பணியகங்களில் சேவையாற்றுவதற்கென தெரிவு செய்யப்படும் அதிகாரிகள் தொடர்ந்து நிலையான மாதச்சம்பளத்தைப் பெறுவதுடன், அதற்கு மேலதிகமாக, அச்சேவைக் காலத்தில் வெளிநாட்டு கொடுப்பனவுத்தொகை ஒன்றும் அவர்களுக்கு வழங்கப்படும்.

10.6 தெரிவு செய்யப்பட்ட அதிகாரி, அவரது வெளிநாட்டு சேவைக்காலத்தின்போது, அவருக்கும் அவரது வாழ்க்கைத்துணைக்கும் மற்றும் அவரில் தங்கியிருக்கும் 21 வயதுக்குக் குறைந்த, அதிகபட்சம் இரண்டு பிள்ளைகளுக்கும் இலங்கையிலிருந்து, நியமனம் வழங்கப்படவுள்ள நாட்டுக்குச் செல்வதற்கான இருவழி விமானப் போக்குவரத்து செலவு, தங்குமிடம் மற்றும் ஏனைய அனுமதிக்கப்பட்ட வசதிகளுக்கான செலவு ஆகியவற்றை அதிகாரிக்கும், அரசுக்குமிடையிலான உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். குறிப்பிட்ட குடும்ப உறுப்பினர்களைத் தவிர ஏனைய குடும்ப உறுப்பினர்களும், உடன் செல்ல வேண்டுமென்ற எந்தக் கோரிக்கைகளையும், வேறு அனுமதிக்கப்படாத எந்தவொரு வசதிக்குமான கோரிக்கைகளையும் அமைச்சு அனுமதிக்காது.

10.7 தனது கடமைக்காலத்தைப் பூர்த்திசெய்த பின்னர், அலுவலர் கட்டாயமாக இலங்கைக்குத் திரும்பி, வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சில் தனது கடைமைகளைப் பொறுப்பேற்றதை அறிவிக்க வேண்டும்.

11. இங்கு குறிப்பிடப்படாத, ஆட்சேர்ப்புச் செயன்முறை தொடர்பிலான எந்தவொரு விடயம் குறித்தும், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும். இவ்வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்பட்ட பொதுப் பரீட்சை விதிகளை சகல விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில அறிவித்தல்களிடையே வேறுபாடுகளெதுவும் இருப்பின், சிங்கள அறிவித்தலே முன்னிற்கும்.

அருணி ரணராஜா,
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு
வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை
அமைச்சின் செயலாளர்

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
குடியரசு கட்டிடம்,
கொழும்பு 01,
2025, சனவரி 17.

01-560

**திருத்தம்**

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) கடற் பொறியியல் உதவியாளர் தரம் III (இலங்கை தொழில்நுட்ப சேவை) இற்காக அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஓய்வூதியம் உரித்தான பதவியொன்றில் சேவையாற்றும் அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

2024.12.27 ஆந் திகதி மேற்படி தலைப்புடன் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் முதல் மற்றும் இறுதிப் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானி இலக்கம் 2370 எனத் திருத்தமடைதல் வேண்டும்.

விண்ணப்ப ஏற்பு முடிவுத் திகதி : 2025.02.14

01-665

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*